# இயற்கைக்கு மேம்பட்டவைகள்

1



சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# விசுவாசம் கேள்வியினாலே வருகிறது



சகோ. பிரன்ஹாம் பேசிய செய்தியிலிருந்து

# *செய்தி:* தேவனால் அருளப்பட்ட பாதை, டிசம்பர் 1, 1953

211. இப்பொழுது, எலியா, அவன் மலையை விட்டு வருவதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. ஒருநாள் இறங்கிவந்த வேறொரு மனிதனை எனக்குத் தெரியும், அவனுக்கு குஷ்டரோகம் பிடித்திருந்தது, அவனுடைய பெயர் தான் நாகமான். அவன் அங்கே இறங்கி வந்து, அவன் பெற்றிருந்தான்... "ஓ, என்னே." அவன் கேள்விப்பட்டான்... விசுவாசம் கேள்வியினாலே வருகிறது, இல்லையா? தேவனுடைய வார்த்தையின் மூலமாக கேட்பதினால் வருகிறது. அங்கே சீரியாவில் இருந்த எல்லா மருத்துவர்களையும் அவன் முயற்சி செய்து பார்த்தும், அவர்களில் யாருமே அந்த குஷ்டரோகத்திலிருந்து அவனைக் குணப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் சிறைப்பிடித்து வந்திருந்த ஒரு சிறு பெண்பிள்ளை அங்கேயிருந்தாள் என்பதை அவன் கேள்விப்பட்டான். அவள் அநேகமாக ஒரு நல்ல கிறிஸ்தவ அனுபவத்தை உடையவளாயிருந்தாள், அல்லது நல்ல - ஒரு நல்ல இரட்சிப்பின்

அனுபவத்தைக் கொண்டிருந்தாள். அவள், "உமக்குத் தெரியுமா, அங்கே எங்கள் தேசத்தில் எலிசா என்ற பெயருடைய ஒரு மனிதர் இருக்கிறார், அவர் தெய்வீக சுகமளித்தலை செய்கிறார். எனக்குத் தெரிந்த வரையில் (Far as), அவரிடம் யாருமே குஷ்டரோகத்திலிருந்து இதுவரை சுகமடைந்ததில்லை, அவர் உமக்காக ஜெபித்தால், நீர் சுகமடைவீர்" என்று கூறினாள். ஓ, என்னே, அப்படிப்பட்ட இன்னும் சில சிறு பெண்பிள்ளைகள் நமக்குத் தேவையாயிருக்கிறது. அது சரியே.

212. சரி. "நல்லது, நாம் சேணம்பூட்டுவோம் என்று நம்புகிறேன்" என்று கூறுகிறான். அந்த மனிதனைக் கவனியுங்கள்: அவன் அநேக மாற்று வஸ்திரங்களையும், அநேக பவுண்டுகள் எடையுள்ள வெள்ளியையும், அநேக பவுண்டுகள் எடையுள்ள தங்கத்தையும் அங்கே எடுத்துக்கொண்டு போனான். இப்பொழுது, அவன்-அவன் தன்னுடைய மனதில் கற்பனை செய்து வைத்திருந்த விதமான தெய்வீக சுகமளித்தலைத்தான் அவன் விரும்பினான், "நான் இந்தவிதமாகத்தான் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறேன்." எனவே அவன் ஓட்டிச் சென்று,

அங்கு போய், அங்கிருந்த எலிசாவுக்கு... முன்பாக நின்றான்.

213. எலிசா இங்கே பின்னால் ஒரு சிறிய பழைய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருப்பதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது, அவன் தன்னுடைய சிறு மண் குடிசையில் இருந்து, வேதவாக்கியங்களில் சிலவற்றை வாசித்துக் கொண்டிருந்தான். அப்போது இதோ கேயாசி உள்ளே வந்து, அவன், "ஓ, எஜமானரே" என்றான்.

214. "உனக்கு என்ன வேண்டும்?"

215. "நல்லது, அங்கே வெளியிலுள்ள சீரிய சேனைக்கு படைத்தலைவனாகிய மகத்தான நாகமான் அங்கேயிருக்கிறான்; அவனுக்கு குஷ்டரோகம் உள்ளது."

216. "'இந்த யோர்தானில் போய், எழுதரம் முழுகு' என்று அவனிடம் சொல்."

217. "நல்லது, அவனைப் பார்க்கும்படிக்கு நீர் வெளியே போகவில்லையா?"

218. "இல்லை, எனக்கு நேரமில்லை; நான் இப்பொழுது கர்த்தரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன்."

219. அதனால் அவன், “ஏன், அவர் வேதப்புத்தகம் வாசித்துக் கொண்டும், ஜெபத்திலும் இருக்கிறார்; அவர் வெளியே வர மாட்டார். அவர், ‘யோர்தானில் போய், ஏழுதரம் முழுகச்’ சொன்னார்” என்று கூறுகிறான்.

220. ஓ, அவன் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உரத்த சத்தமாக பழிதூற்றினானா? ஓ, என்னே. சற்று ஏறக்குறைய இப்பொழுது ஜனங்கள் செய்வதைப் போன்று. “ஓ, அந்தப் பழங்கால இடத்திற்கு நான் மறுபடியும் திரும்ப போகவே மாட்டேன். ம்ம். அந்தப் பரிசுத்த உருளையர்களோடு நான் ஒருக்காலும் எந்த சம்பந்தமும் வைத்துக்கொள்ள மாட்டேன்.” துப்பாக்கிக் குண்டை சாப்பிட்ட ஒரு தவளையைப் போன்று வீங்கி உப்பிப்போய், அதைப் போன்று சுற்றிலும் செல்லுதல். “ஓ, இனிமேலும் அதனோடு எந்த சம்பந்தமும் ஒருக்காலும் வைத்துக்கொள்ளவே மாட்டேன்; நான் அதை விசுவாசிக்க முடியாது, இல்லை, இல்லை, இல்லை, இல்லை.”

221. அந்தக் காரணத்தினால் தான், இப்பொழுது நீங்கள் இருக்கிற இந்த நிலையில் இருக்கிறீர்கள். அது சரியே. தேவனுடைய

வார்த்தையானது பாதையைப் போட்டிருக்கிறது (laid out).

222. "அந்தப் பழைய சேறு நிறைந்த கலங்கிய தண்ணீரில் நான் முழுகுவதா? இல்லை, ஐயா! நல்லது, மேலே சீரியாவிலுள்ள தண்ணீர்கள் இவைகளைக் காட்டிலும் மிகச்சிறந்தது ஆயிற்றே."

223. அன்றொரு நாள் ஒரு நபர் கூறினதைக் கேட்டேன், அவர் சொன்னார், ஓ, அது கொஞ்ச காலத்திற்கு முன்பு, அவர், "நான் அங்கே அந்தப் பீடத்திற்கு இறங்கிப் போய், மூக்கொழுக வேண்டும் என்றும்... அவ்வாறு நான் செய்யப் போகிறேன் என்றா என்னிடம் சொல்ல வருகிறீர்களா," என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், "நான் அங்கே இறங்கிச் சென்று, அழுது, அங்கே கீழேயிருக்கும் அந்த மற்ற ஜனங்களைப் போன்று நீண்ட நேரமாக கதறிக் கொண்டிருக்கவும், சத்தமாக பீறிட்டு அழுது கொண்டும், தேம்பிக் கொண்டிருக்க வேண்டும் என்றா என்னிடம் கூறக் கருதுகிறீர்கள்" என்று கூறினார்.

224. அதற்கு நான், "உமக்கு இரட்சிக்கப்பட விருப்பம், நீர் அதை விரும்புகிறீர்" என்றேன்.

225. “ஓ,” அவர், “நான் ஒருபோதும் அதைச் செய்ய மாட்டேன்” என்று கூறினார்.

226. நான், “அப்படியானால் நீர் இருக்கிறவிதமாகவே தொடர்ந்து செல்லும்” என்றேன்.

227. நான் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன், அங்கே ஒரு பெண்மணி இருந்தாள், அவள் அழுதுகொண்டும், தன்னுடைய கரத்தை உயர்த்தி, சத்தமிடவும் தொடங்கினாள். அவன் சிறு வாலிபனாகவும், பாப்டிஸ்டு போதகனாகவும் இருந்தான், அவன் என்னிடம் மேலே வந்து, அவன், “பில்லி, நீர் எப்போது அந்தப் பரிசுத்த உருளையர்களை விட்டு வெளியே வரப் போகிறீர்?” என்று கேட்டார்.

228. நான், “அவர்களை விட்டு வெளியேவா?” என்றேன்.

229. “அந்தப் பரிசுத்த உருளையர்களை விட்டுத் தான், நான் அன்றொரு இரவில், அந்தப் பெண்மணி எழுந்து, தன்னுடைய கரங்களை மேலே உயர்த்தி அழவும் கூச்சல்போடவும் தொடங்கும் வரையில், உம்முடைய செய்தியை கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தேன்” என்று

கூறினார். நான் சொன்னேன்… “அது உமக்கு இடைஞ்சலாக இல்லையா?” என்று கேட்டார்.

230. அவர், “என்னவென்று உமக்குத் தெரியுமா? அது ஒரு ஜன்னலில் தொங்கும் திரைச்சீலையைப் போன்று என்னுடைய முதுகில் குளிர் நடுக்கம் எழும்பும்படி ஆக்கி விட்டது” என்று கூறினார்.

232. நான், “வாலிபனே, நீ எப்பொழுதாவது பரலோகத்துக்குப் போவாயானால், நீ குளிரால் உறைந்தே மரித்துவிடுவாய். அவர்கள் நிச்சயமாக பரலோகத்திலே சத்தமிட்டுக்கொண்டும், அவ்வாறு தொடர்ந்து செய்துகொண்டுமிருக்கிறார்கள். அது சரியே. அவர்கள் தேவனுடைய பலிபீடத்திற்கு முன்பாக, ‘சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்’ என்று பரலோகத்தினூடாக இரவும் பகலும் கூச்சல் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்” என்று கூறினேன். ஆமென். ஆம், ஐயா. தேவனால் அருளப்பட்ட பாதை.

233. நீங்கள், “சகோதரன் பிரன்ஹாமே, அந்தப் புது விதமான மார்க்கத்தைத்தானே நீர் போதித்துக் கொண்டிருக்கிறீர்” என்று கேட்கலாம். ஊ-உ, நான் பழங்கால வித மார்க்கத்தின் ஒரு

முற்றிலும் புதிய வகையைத்தான் நான் பெற்றிருக்கிறேன்.

234. “கூச்சலிடுவதும், கத்துவதும் மற்றும் அவ்வாறு தொடர்ந்து செய்வதுமான அங்கேயுள்ள பழங்கால மார்க்கம்?”

235. “ஆமாம், அது சரியே.”

236. தேவன் யோபிடம் கூறினார், அவர், “உலகம் அஸ்திபாரம் போடப்பட்ட போது, அந்தப் பழங்கால மார்க்கம் முதலாவது இருந்த போது, நீ எங்கேயிருந்தாய்? ஏன்... அப்போது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய் பாடினார்களே, தேவபுத்திரர் கெம்பீரித்தார்களே?” என்று கூறினார். வியூ. ஒ, சகோதரனே. தேவனால் அருளப்பட்ட பாதை, அவ்வளவு தான். ஆமாம், அப்படியே செய்யும்படி தேவன் கூறியுள்ளதைச் செய்து கொண்டிருப்பது.

237. சரி, முதலாவது காரியம் என்னவென்று தெரியுமா, நாகமான், என்னால் அவனைக் காண முடிகிறது, அவன்: “நான் ஒருபோதும் அங்கே திரும்பிப் போகவே மாட்டேன்” (என்றபடி), பொங்கி எழுந்தவாறு, அங்கிருந்து போய்விட்டான்.

238. “இப்பொழுது, இதோ பாரும் தகப்பனே, ஏதோவொரு கடினமான காரியத்தைச் செய்யும்படி தீர்க்கதரிசி கட்டளையிட்டிருந்தால், நீர் இந்தப் பணம் எல்லாவற்றையும் கொடுத்திருப்பீரே (give you all this money), நீர் சுகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக கொடுத்திருப்பீரே, நல்லது, நீர் அதற்கு சம்மதித்திருப்பீரே. ஆனால் ‘யோர்தானுக்குப் போய் முழுகும்படியாக’ அவர் உம்மிடம் கூறினதின் நிமித்தமாக, நீர் ஏன் அதைச் செய்வதற்கு விருப்பமில்லாமல் இருக்கிறீர்” என்று கூறும்படியாக, தன்னைக் குறித்து போதுமான இரட்சிப்பை ஒரு மனிதன் உடையவனாயிருந்தான்.

239. “நல்லது, ஒருக்கால் நான் முயற்சித்துப் பார்ப்பேன்” என்று அவன் (கூறுவதை) என்னால் காண முடிகிறது. இதோ அவன் இறங்கிப் போகிறான், உங்களுக்குத் தெரியும், அவன் அங்கே இறங்கிச் சென்று, கீழே அந்த சேறு நிறைந்த யோர்தானைப் பார்க்கிறான், உங்களுக்குத் தெரியும், “ம்ம், அந்த ஒருகூட்ட பரிசுத்... (நான் என்ன கூறக் கருதுகிறேன் என்று உங்களுக்குத் தெரியும்.): நான் அங்கே அந்த இடத்திற்கு இறங்கிப்போக வேண்டுமா?” சரி, அப்படியானால்

உன்னுடைய குஷ்டரோகத்தை நீயே வைத்துக்கொள்.

240. எனவே பிறகு, அவன் கீழே இறங்குகிறான், உங்களுக்குத் தெரியும். நிறைய ஜனங்கள் செய்வது போன்று, அவன் தன்னுடைய உயரமான குதிரையிலிருந்து இறங்குவதை என்னால் காண முடிகிறது, உங்களுக்குத் தெரியும். "நான் அதைப்போன்ற அந்தக்கூட்ட ஜனங்களிடம் இறங்கி வரும்படி என்னை நானே தாழ்த்த வேண்டுமா." எனவே, அங்கே தண்ணீருக்குள் போவதை என்னால் காண முடிகிறது, "ம்ம்," உங்களுக்குத் தெரியும், *இந்த* விதமாக தன்னுடைய மூக்கைப் பிடித்தபடி, கீழே முங்கி, திரும்ப எழும்பி, "ஓ, அங்கே அதில் எதுவும் கிடையாது என்று நான் உங்களிடம் சொன்னேனே. எனக்கு இன்னும் குஷ்டரோகம் இருக்கிறதே" என்று கூறுகிறான்.

241. "உ-ஊ, தீர்க்கதரிசி, 'ஏழுமுறை' என்று கூறியுள்ளார், ஏழு முறை ஆவது மட்டுமாக, அப்படியே தொடர்ந்து முங்கி எழுந்து கொண்டிரும்."

242. "ஆனால் சகோதரன் பிரன்ஹாமே, நான் எவ்வளவு நேரம் முங்க வேண்டும்?"

243. "அது வரைக்கும்."

244. "எது வரைக்கும்?"

245. "நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வது வரையில், இதைத்தான் இயேசு கூறியுள்ளார்: 'நீங்கள் வல்லமையால் தரிப்பிக்கப்படும் வரைக்கும், எருசலேம் பட்டணத்திலேயே காத்திருங்கள்' என்று அவர் கூறியிருக்கிறார்."

246. "இரண்டு நாட்களா?"

247. "அது வரைக்கும்."


248. "எவ்வளவு காலம்?"

249. "அது வரைக்கும், நீங்கள் தரிப்பிக்கப்படும் வரையில்." அது சரியே. அது வரையில், அப்படியே அங்கேயே தரித்திருங்கள்; அதுதான் கர்த்தருடைய வார்த்தையாக இருக்கிறது.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 1



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

செய்தி: **பனி – வெண்புறா சிறகுகள் மேல்,** நவம்பர் 28, 1965, ஷ்ரீவ்போர்ட், லூயிசியானா, அமெரிக்கா

186. என் தாயார் மகிமைக்குள் பிரவே சித்து விட்டார்கள். அவர்கள் மிகவும் வினோத மானவர்கள். அவர்கள் வாழ்ந்த நாட்களில் மூன்று அல்லது நான்கு சொப்பனங்களைக் கண்டார்கள். அவை யாவும் எப்பொழுதும் உண்மையாகவே இருந்தன. அவர்கள் சொப்ப னத்தை என்னிடம் சொல்லத் தொடங்கினார் கள். நான் "அம்மா... நிறுத்திக் கொள்ளுங்கள். மீதியான சொப்பனத்தை நான் கூறுகிறேன்" என்று சொல்லி அதைக் கூறுவேன். பாருங்கள்?

187. அர்த்தம் உரைப்பதற்காக என்னிடம் நீங்கள் சொப்பனத்தைக் கூறும் போது. நீங்கள் கண்ட விதமாகவே அதை என்னிடம் கூறுவதில்லை, **அதை நான் தரிசனத்தில் காணும்போது, நீங்கள் சொப்பனத்தில் கண்டதை நான் அப்படியே காண்கிறேன்,**

பிறகு அதன் அர்த்தம் என்னவென்று அவர் என்னிடம் உரைக்கிறார். பாருங்கள்? **உங்கள் சொப்பனத்தை நீங்கள் என்னிடம் கூற வேண்டிய அவசியமில்லை, அவர் சொப்ப னத்தையே எனக்குக் காண்பித்து விடுகி றார்.** பாருங்கள்? **பிறகு நான், "நீங்கள் இதை கூற மறந்து விட்டீர்களே; அதை கூற மறந்து விட்டீர்களே" என்கிறேன்.** பாருங்கள்? **சொப்பனத்தின் அர்த்தத்தை உரைக்கவல்ல தேவன், அந்த சொப்பனத்தையும் காண் பித்து தரமுடியும்.** அவர் ஒன்றைக் காண் பிப்பாரானால், அதன் அர்த்தத்தை அவரால் உரைக்க முடியும்.

188. அவ்வாறு வேதாகமத்தில் ஒரு சம்பவம் உள்ளதல்லவா? "உன்னால்..." நான்-நான்... அது என் நினைவுக்கு வந்தது. அது, தானியேல், அல்லவா? இல்லை. யோசேப்பு, அது வேதத்தில் எங்கோ உள்ளது. எனக்கு ஞாபகம் வந்தது. "சொப்பனம் என்னவென்று உன்னால் கூறமுடியுமானால்...." ஓ. அது நெபுகாத்நேச்சார் ராஜா. அது சரி. அவன்,

“உங்களால் முடிந்தால்... உங்களால் முடியா விட்டால்...” என்றான்.


189. மந்திரவாதிகள், “சொப்பனத்தை சொல்லும்” என்றனர்.

190. அவன், “சொப்பனம் எனக்கு மறந்து விட்டது” என்றான். அது சரி. எனக்கு அது ஞாபகம் வந்தது.

★★★★★

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 2

## சகோ.பிரன்ஹாம் புயலுக்கு கட்டளையிட்டவுடன் அது மறைந்து போதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: உங்களிலிருக்கிறவர், நவம்பர் 10, 1963, பத்தி எண் 76-151

நான் கொலராடோவின் மலையின்மேல் இருந்தபோது, அங்கு உலர்ந்திருந்தது. வேட்டை பொருள் சொற்பமாக இருந்தது. சகோதரன் வீலரை கர்த்தர் ஆசீர்வதித்து ஒரு நல்ல பரிசு அளித்தார். அதுவே அவர் முதன் முறையாக காட்டில் வேட்டையாடுவது. கர்த்தர் அவரை ஆசீர்வதித்தார். அதன் பின்பு நானும் இருபது ஆண்டுகாலமாக எதிர்ப்பார்த்திருந்த ஒரு பெரிய பரிசை சுட்டேன். வெகுகாலமாக நானும் சகோதரன் பாங்க்ஸூம் அதை பின்தொடர்ந்து வந்தோம். என்னுடைய துப்பாக்கியை உஷ்ணப்பிரதேசத்தில் உபயோகித்து விட்டு, குளிர் பிரதேசத்திற்குக் கொண்டு வரும்போது அதன் கண்ணாடி சற்று பெரிதாகி விடுகின்றது. அதன் விளைவாக, குறி சில அங்குலங்கள் தவறிப்போய், மரங்களின் நடுவே இருந்த அந்த மிருகத்தின் மேல், படக்கூடாத இடத்தில் குண்டு

பட்டுவிட்டது. அது சற்று கீழே பாய்ந்திருக்குமானால், ஒரு நொடியில் எவ்வித வலியுமின்றி அந்த மிருகத்தைக் கொன்றிருக்கும். அது சற்று உயரப் பாய்ந்ததால், மிருகம் குதித்துக் கீழே விழுந்தது.

பில்லி அப்பொழுது என்னுடன் இருந்தான். "அந்த குண்டு அதைக் கொன்று விட்டது" என்றான் அவன். நானும் அப்படித் தான் நினைத்தேன். ஆனால் நாங்கள் அங்கு சென்றபோது, அதைக் காணோம். பில்லி, "நீங்கள் மரத்தை தான் சுட்டிருக்கிறீர்கள்" என்றான். அப்பொழுது ஒரு எச்சரிக்கை சிக்னல் (Warning Signal) கொடுக்கப்பட்டது. நாங்கள் இருந்த இடத்திற்கு சற்று உயரத்தில் ஏறக்குறைய நூறு பேர் இருந்தனர். சகோதரன் பாமரும் மற்றவர்களும் அதற்கு சாட்சிகள். சகோதரன் ஈவான்ஸ் அங்கிருந்தார். சகோதரன் வெல்ஷ் ஈவான்ஸூம் அவருடைய மகன் ரானியும் (சற்று முன்பு அவனை நான் கூட்டத்தில் கூப்பிட்டேன்) 'பசு பாளையம்' (Cow Camp) என்று அழைக்கும் இடத்திற்கு அநேகர் சென்றிருந்தனர். அங்கு மாடு மேய்ப்பவர்கள் தங்கி, சவாரி

செய்து, தங்கள் மாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைப்பார்கள். நான் கூட முன்பு அப்பாளையத்தில் தங்கியிருந்து, மாடுகளை ஓட்டி, ஒருபுறம் ஒதுக்கி வைப்பதுண்டு.

அங்கு ஏறக்குறைய நூறுபேர் இருந்தனர். அங்கு 'பனிப்புயல்' (Blizzard) உண்டாகும் என்று அறிவிக்கப்பட்டு 'எச்சரிக்கை சிக்னல்' கொடுக்கப்பட்டதால், அங்கிருந்து உடனே புறப்பட்டுச் சென்று விட வேண்டுமென்று எல்லோருக்கும் தெரியும். எனவே, சகோதரன் பாமரும் மற்றவர்களும் உடனே புறப்பட்டு சென்று விட்டனர். ஏனெனில் அவர்கள் கார் மூவகை வேகத்தில் மாத்திரம் செல்லக்கூடியது (three speed transmission) அவர்கள் உடனே புறப்பட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. வானிலை மோசமானால், வாரக்கணக்காக அங்கேயே தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். 'பனிப்புயல் வரப்போகின்றது' என்று வானொலியும் அறிவிக்கின்றன என்று சொல்லி, எங்களுக்கு மேலே இருந்தவர்களும், சுற்றிலும் இருந்தவர்களும் கூட்டம் கூட்டமாகச்

சென்றுவிட்டனர். அங்கிருந்து புறப்பட்டு சென்று விட வேண்டும் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

ஆனால் என்னுடன் கூட இருந்த மற்ற சகோதரருக்கு, மானைச் சுடுவதற்கு இரண்டு அனுமதிச் சீட்டுகள் இருந்தன. அவர்களுக்கு சென்றுவிட விருப்பமில்லை, சரி, அப்படியானால் நாம் தங்கலாம் என்று அவர்களிடம சொன்னேன். ஆனால் ஆறு நாட்களுக்குக் பிறகு ஒரு கூட்டம் டூசானில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதற்கு நான் போக வேண்டும்.

எனக்கு விவாகமாகி இருபத்திரண்டு ஆண்டுகளாகின்றன. இருபது ஆண்டுகளாக, ஒவ்வொரு விவாக நாளன்றும், நான் மலைக்குச் சென்றிருக்கிறேன். அங்கு ஒரு சிறிய ஸ்தலம் உள்ளது. நான் அங்கு சென்று ஜெபிப்பதுண்டு. என் மனைவியை நான் ஏற்றுக் கொண்ட ஸ்தலம் அதுவே.

என் தேன் நிலவன்று, வேட்டைப் பயணம் செல்ல என்னிடம் பணமில்லை. என் மனைவியை தேன் நிலவுக்காக வேட்டைக்கு கூட்டிச் சென்றேன். அங்கிருந்த ஓரிடத்தையடைய, சுற்றிலுமுள்ள மரங்களைக்

காலிசெய்ய என் மனைவிக்கு உதவி செய்தேன். அதன் விளைவாக ஒரு சிறு இடம் எனக்கு அங்கு கிடைத்தது. அங்கு தான் எங்கள் தேன்நிலவை கழித்தோம். ஒவ்வொரு விவாக நாளன்றும், அந்த இடத்திற்கு நான் செல்லும் போது, என் மனைவியை நினைவுகூருவேன். அக்டோபர் 23ம் தேதியன்று அந்த சீசன் (Season) தொடங்கும். இருபது ஆண்டுகளாக என் விவாக நாளை என் வீட்டில் கழித்ததில்லை; அந்த இடத்தில் தான் கழித்திருக்கிறேன்.

அன்று என் விவாக நாளாக இருந்தது. சகோதரன் மான்... நான் அவர்களிடம், “நீங்கள் இங்கு இருக்க விரும்பினால் ஒரு மாதம் இங்கு தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்” என்றேன். ஏனெனில் ஒரே இரவில் இருபது அடி உயரத்திற்குப் பனி பெய்வதை, பனிப்புயலின் போது நான் கண்டிருக்கிறேன். அங்கு ஓரிடம் உலர்ந்து காணப்படும். ஆனால் அடுத்த நாள் காலைக்குள், அங்கு தங்குவதற்கென அடிக்கப்பட்ட கூடாரத்தின் உச்சிவரை, பனிபெய்திருக்கும். பனி உருகும் வரை அங்கேயே தங்க வேண்டி நேரிடும். அந்த இடம்

காட்டில் பதினைந்து அல்லது இருபது மைல் உள்ளே இருக்கும். ஆனால் ஆபத்தான நிலை ஏற்படுமானால், அவர்கள் ஹெலிகாப்டரை அனுப்பி உங்களைக் காப்பாற்றுவார்கள். சாதாரணமாக பனியினால் யாரும் மடிந்து போவதில்லை. பனி உருகும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டும்.

பனிப்புயலைக் குறித்த முன்னறிவிப்பைக் கேட்ட மாத்திரத்தில், நாங்கள் தரையில் அமர்ந்தோம். நான், “ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள். இங்கு நீங்கள் தங்க விரும்பினால், நானும் உங்களுடன் தங்குவேன், நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டு, அவளுக்கு விவாக நாள் வாழ்த்து கூறிவிடுவேன். இங்கு நாம் தங்க வேண்டுமானால் திண்பண்டம் வாங்கவேண்டும்” என்றேன். எங்களிடம் இருந்த ரொட்டி தீர்ந்துவிட்டது. ‘பான்கேக்’ (pancake) தின்பண்டத்தை நான் கண்ணால் காணக்கூட விரும்பவில்லை. ஏனெனில் கனடாவில் இருபத்தொன்று நாட்களாக அதையே தின்றதால், சலித்துப் போய்விட்டது, எனவே நான் ரொட்டி வாங்கவேண்டுமென்று விரும்பினேன்.

அவர்கள் தங்கலாமென்று தீர்மானித்தனர். சகோதரன் மானும் நானும் கீழே சென்று மளிகை சாமான்கள் வாங்கினோம். நான் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டபோது, யாரும் பேசவில்லை... மளிகை சாமான்கள் வாங்கி அதைக் கட்ட ஒரு மணி நேரம் பிடித்தது. அதுவரை நான் காத்திருந்து, மீண்டும் என் மனைவியைத் தொலைபேசியில் கூப்பிட்டேன். அப்பொழுதும் என் மனைவி பேசவில்லை, நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள் இப்பொழுது இங்கிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆம், சகோதரன், சகோதரி ஈவான்ஸ் இருவரும் இங்குள்ளனர்.

நான் சகோதரி ஈவான்ஸை தொலைபேசியில் கூப்பிட்டேன். அவர்கள், "நான் சகோதரி பிரான்ஹாமைத் தொலைபேசியில் கூப்பிட்டு, உங்கள் சார்பாக விவாக நாள் வாழ்த்து தெரிவித்து விடுகிறேன்" என்றார்கள். என் மனைவி அப்பொழுது குழந்தைகளுக்கு மளிகை சாமான்கள் வாங்க கடைக்குச் சென்றிருந்தாள்.

நாங்கள் திரும்பி மலைக்கு வந்தோம். அடுத்த நாள் காலையில் வானத்தில் மேகங்கள் மாத்திரமேயிருந்தன. மழை காலத்தில் மழை பெய்யாததால் எல்லாமே உலர்ந்து கிடந்தது. உலர்ந்த நிலையின் காரணமாக, வேட்டை சீசனை அவர்கள் இன்னும் சில நாட்கள் நீடித்து வைக்கவேண்டியிருந்தது.

அன்று காலை நான் சகோதரரிடம், "முதல் துளி மழை, அல்லது முதல் பனி, அல்லது கல் மழை **(Sleet),** எது விழுந்தாலும், உங்களால் கூடுமானவரை துரிதமாக முகாமிற்குச் சென்று விடுங்கள். ஏனெனில் பதினைந்தே நிமிடங்களில் உங்கள் கைகளையும் கூட நீங்கள் காணமுடியாத அளவிற்குப் பனிபெய்துவிடும். பாருங்கள்? அது சுழன்று சுழன்று அடிக்கும். தேசத்தைப் பற்றி எவ்வளவு நன்றாக நீங்கள் அறிந்திருந்த போதிலும் திசைகெட்டு விடுவீர்கள். எனவே, முகாமிலேயே தங்கியிருங்கள். இல்லையேல், மடிந்து போவீர்கள், ஏனெனில் சில நேரங்களில் கல்மழை வேகமாகப் பெய்து காற்றடிக்கும்போது, உங்களால் மூச்சுவிடவும் முடியாது. அங்கேயே நீங்கள் இறந்து போக நேரிடும். எனவே கல்மழை

பெய்யத் தொடங்கினவுடனே, உங்களால் முடிந்தவரை, எங்கிருந்தாலும் துரிதமாக முகாமிற்குச் சென்று விடுங்கள்'' என்றேன்.

"நீங்கள் மேலே சென்று கணவாயில் உட்காருங்கள். நான் இன்னும் உயரச்சென்று மலையிலிருந்து கல்லை உருட்டி, மான்களைப் பயப்படுத்தி கீழே ஓட்டி விடுகிறேன். உங்களுக்கு வேண்டிய மானை நீங்கள் சுடுவதற்காக தெரிந்து கொள்ளுங்கள்'' என்றேன்.

எனவே நான் மேலேறிச் செல்லத் தொடங்கினேன். 'சாடில்' (Saddle) என்று நாங்கள் வழக்கமாக அழைக்கும் இடத்தை நான் அடைந்தேன். அந்த இடத்தைக் கடந்துதான் நாங்கள் 'க்வேக்கர் நாப்' (Quaker knob) என்னும் இடத்திற்குப் போக வேண்டும். அது மிகவும் உயரமுள்ள இடம் அந்த 'சாடில்'லை நான் ஏறக்குறைய அடைந்து விட்ட தருணம், மேகங்கள் கருமையாகத் தொடங்கின. மேலே வாகனம் எதுவும், மாடு மேய்ப்பவர் எவரும் இல்லை. சில நிமிடங்களுக்குள் மழை பெய்ய தொடங்கியது. என் துப்பாக்கியை 'கோட்' டுக்குள் மறைத்துக்கொண்டு, தூரப்பார்வை கண்ணாடி

மங்காதபடிக்கும், துப்பாக்கியின் குழாய் நனையாதபடியும் செய்தேன். ஒரு கரடியை சந்திக்க நேர்ந்தால், என்ன செய்வது என்று நினைத்துக்கொண்டே, தூரப்பார்வை கண்ணாடியை இப்படிப் பிடித்துக்கொண்டு, சற்று மரத்தினடியில் அமர்ந்தேன். அங்கு, "தேவனாகிய கர்த்தாவே, நீரே மகத்தான யேகோவா. உம்மை நான் நேசிக்கிறேன்" என்று சொல்லி ஜெபம் செய்தேன்.

எனக்கு எத்தனை அனுபவங்கள் உண்டாயிருக்கின்றன! சகோதரன் பாமருக்கும் மற்ற சகோதரருக்கும், கழுகு இளைப்பாறும் ஸ்தலத்தையும், அவ்விடமிருந்து அது உயர பறந்து செல்வதையும் நான் காண்பித்துக் கொடுத்தேன். அங்கு தான் இவையாவும் சம்பவித்தது. அங்கு இருப்பது என் மனத்திற்குகந்த செயலாகும். மலைகளின் மேல் ஆண்டவருடன் எத்தனையோ மகத்தான அனுபங்களைப் பெற்றிருக்கிறேன். எனவே அங்கு சென்றால் அவரைக் காணாமலிருக்கவே முடியாது. அவர் எங்கும் இருக்கிறார்.

அங்கு அமர்ந்தேன். அப்பொழுது சிறு கல்மழை பெய்யத் தொடங்கினது. சுழல் காற்று

வீசத் தொடங்கினது. நான், ‘‘எனக்கு கீழே போக நன்றாக வழி தெரிந்தால், இப்பொழுதே கீழே இறங்கி விடுவது நல்லது’’ என்று எண்ணினேன்.

நான் கீழே பார்த்தபோது, அடிபாகம் எதுவும் தெரியவில்லை. மேகங்கள் சுழன்று கொண்டிருப்பதையும், கல்மழை பொழிவது மாத்திரமே காணமுடிந்தது. அந்தப் பனிப்புயல் தொடங்கிவிட்டது. ‘‘பனிப்புயல் வரப்போகின்றது’’ என்று அநேக நாட்களாக அறிவிக்கப்பட்ட வானிலை முன்னறிவிப்பு நிறைவேறிவிட்டது.

கனடாவைச் சேர்ந்த சகோதரன் டாம் சிம்சன் இப்பொழுது இங்கிருக்கிறார். அவர் வானிலை முன்னறிவிப்பைக் கேட்டார். அந்த பாகத்திற்குச் செல்ல வேண்டாமென்று அவருக்கு அறிவுரை கூறப்பட்டது. ஏனெனில் வானிலை முன்னறிவிப்பு, ‘‘அங்கு பனிப்புயல் தோன்றும்’’ என்று அறிவித்தது. சகோதரன் டாம், இங்கே இருக்கிறீர்களா? இங்கு தான் அமர்ந்திருக்கிறார். பனிப்புயல் வந்து கொண்டிருந்தது. எல்லோரும் அதற்காக ஆயத்தமானார்கள்.

என் துப்பாக்கியை இப்படி என் சிகப்பு சட்டைக்குள் புகுத்திக்கொண்டு, மலையிலிருந்து

கீழே இறங்கி வரத்தொடங்கினேன். ‘சாடில்’லிருந்து நான் அரை மைல்தூரம் வந்திருப்பேன். ஓ, அந்த பெரிய பனித்துளிகள் பெய்யத் தொடங்கின. காற்றும் மலையின் மேல் சுழன்று வீசியது. மலையடிவாரத்தை என்னால் காண முடியவில்லை. எனக்கு முன்னால் இருபது அல்லது முப்பது அடி தூரமே காணமுடிந்தது. ‘ஹாக்பாக்’ (Hogback) என்று நாங்கள் அழைக்கும் அந்த சிறிய முகடு (ridge) வரைக்கும் எப்படி வருவதென்று எனக்குத் தெரியும். அப்படியே சிறிய ஓடைக்கு (creek) வந்து, அதைப்பின் தொடர்ந்து வரவும், அது மோசமான நிலையடைந்தால் அங்கிருந்து எங்கு செல்ல வேண்டுமென்றும் எனக்குத் தெரியும்.

ஆகவே நான் கீழிறங்கி வந்தேன். பாதி வழிவந்தபோது, ஏதோ ஒன்று என்னிடம் – இப்பொழுது நான் உங்களிடம் எவ்வளவு தெளிவாக பேசுகின்றேனோ அவ்வளவு தெளிவாக – “நில்! வந்த வழியே பின்னால் போ!” என்றது.

“என்ன இவ்விதம் நினைக்கிறேன்! ஒருக்கால் அது என் சொந்த

சிந்தனையாயிருக்கலாம்!'' என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் என்னால் ஒரு அடிகூட முன் எடுத்து வைக்கமுடியவில்லை.

டேவிட் அன்று காலை எனக்கு சான்ட்விச் (sandwich) செய்து கொடுத்திருந்தான். ஒரு முறை அவன் தன் தகப்பனாருக்கு வெங்காயமும் தேனும் போட்டு சான்ட்விச் ஒன்று செய்து கொடுத்தான், அதுபோன்று எனக்கும் ஒரு சான்ட்விச் ஒன்று செய்து கொடுக்க விரும்பினான் போலும்! (அது மாத்திரமே எங்களிடம் இருந்தது). பலோனி (Baloney) என்னும் உணவையும் அவன் செய்து கொடுத்து, காகிதத்தில் சுற்றிக்கொடுத்தான். அதை நான் சட்டைப் பையில் வைத்திருந்தேன். அது நனைந்துவிட்டிருந்தது. ''சற்று நின்று, இதை புசித்துவிடுகிறேன். அப்பொழுது சரியாகிவிடும்'' என்று நினைத்துக்கொண்டே, சான்ட்விச்சை சட்டைப் பையிலிருந்து எடுத்து தின்னத் தொடங்கினேன். அப்பொழுது சுமார் 10 மணியிருக்கும் ''அதை சாப்பிட்டால் சரியாகிவிடுவேன்'' என்று எண்ணியவாறு முன்னால் செல்லத் தொடங்கினேன். ஆனால்

ஏதோ ஒன்று என்னிடம், "நீ வந்த இடத்திற்கே திரும்பிச் செல்" என்று கூறினது.

"அந்த புயலின் வழியாகத் திரும்பிச் செல்வதா?" என்று எண்ணினேன். இன்னும் அரைமைல் தூரம் மலையின்மேல் இருண்ட காட்டின் வழியாகச் செல்லவேண்டும். இங்கிருந்து ஆர்கன் (organ) இசைக்கருவி இருக்கும் தூரம் வரைக்கும்கூட என்னால் காண முடியவில்லை. எனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது. **முப்பத்து மூன்று ஆண்டு காலமாக நான் கிறிஸ்தவனாக இருந்து வந்துள்ளேன். ஆண்டவர் கூறுவது எவ்வளவு பைத்தியகாரத்தனமாகத் தோன்றினாலும், அதை முதலில் செய்! ஆண்டவர் சொன்னபடியே செய்!**

நான் திரும்பி 'சாடில்'லுக்குச் சென்றேன், கல்மழை அதிகமாகிக் கொண்டே வந்தது. இருளும் அதிகமாகச் சூழ்ந்தது. நான் சற்று அமர்ந்து, என் சட்டையை தூரப்பார்வைக் கண்ணாடியின் மேல் போட்டேன். "நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?" என்று வியந்தேன். "நான் ஏன் இங்கு மறுபடியும் வரவேண்டும்?"

நான் சில நிமிடங்கள் காத்திருந்தேன். நான் எழுந்தபோது ஒரு சத்தம் மிகத்தெளிவாக என்னிடம், "நானே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர்! நானே காற்றையும் மழையையும் படைத்தேன்" என்றது. நான் என் தொப்பியைக் கழற்றினேன்.

"மகத்தான யேகோவாவே, அது நீர்தானா?" என்று கேட்டேன்.

அவர், "கடலின்மேல் காற்றடிக்காதபடிக்கு அதட்டியவர் நானே! அலைகள் தாழும்படி செய்தவர் நானே! வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர் நானே! அணில்கள் தோன்ற நீ கட்டளையிட வேண்டுமென்று உன்னிடம் கூறியவர் நானல்லவா? நீ கட்டளையிட்ட மாத்திரத்தில் அவை சிருஷ்டிக்கப்பட்டதல்லவா? நானே தேவன்" என்றார்.

**ஒரு சத்தம் உங்களிடம் பேசினால், அது கூறுவதை வேத வாக்கியங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அது வேதவாக்கியங்களுடன் பொருந்தாவிட்டால், அதை விட்டுவிடுங்கள். அது எவ்வளவு தெளிவாக இருந்தாலும், அதை விட்டு அகன்று விடுங்கள்.**

நான், "ஆம் ஆண்டவரே" என்றேன்.

அவர், "அந்தப் புயல் காற்றுக்குக் கட்டளையிடு. அது மறைந்து விடும்" என்றார். இந்த வேதாகமம் எனக்கு முன்பாக இருக்கிறது. எனது ஜீவனே அதில்தான் இருக்கிறது.

நான் எழுந்து, "ஆண்டவரே, உமது சத்தத்தை நான் ஒரு போதும் சந்தேகிக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு "மேகங்களே, பனிக்கட்டியே, மழையே, கல்மழையே! நீங்கள் வந்திருப்பது எனக்கு விருப்பமில்லை. உங்கள் இடங்களுக்குச் செல்லும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கட்டளையிடுகிறேன். எங்கள் வேட்டைப் பயணம் முடிவடைந்து, சகோதரர்களை நான் பிரிந்து செல்லும்வரை, சூரியன் உடனே தோன்றி, நான்கு நாட்கள் தோன்றி, நான்கு நாட்கள் சூரிய வெளிச்சம் உண்டாக வேண்டும்" என்று கூறினேன்.


காற்று, "ஊ ஊ ஊ ஊ ஷ்" என்று வீசிக் கொண்டிருந்தது. அது 'ஊஷ்' என்று சத்தமிட்டுக் கொண்டே சென்று, பின்னர், 'வ்யூ, வ்யூ' என்ற விதமாய் சப்தம் குறைந்து, முடிவில் நின்று போயிற்று.

நான் அசையாமல் நின்றேன். அங்கிருந்த என் சகோதரர்கள் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்று வியந்தனர். கல் மழையும், மழையும் நின்று போயின. மலைவழியாக காற்று சுழன்று கொண்டே வந்து, மேகங்களைத் தூக்கிச் சென்றது. அவை நாலா திசைகளிலும் சிதறிச் சென்றன. சில நிமிடங்களில் சூரிய வெளிச்சம் நன்கு பிரகாசித்தது, வெப்பமானது, நான் கூறுவது உண்மை! அது உண்மையென தேவனறிவார்.

என் தொப்பியைக் கழற்றின நிலையில் நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். என் மெய் சிலிர்த்தது.

நான், "சிருஷ்டி கர்த்தருடைய கரங்களில் எல்லாமே உள்ளது. அவர் என்னிடம் என்ன கூறினார்?" என்று சிந்திக்கலானேன்.

என் துப்பாக்கியைக் கையிலெடுத்துக்கொண்டு, தூரப்பார்வை கண்ணாடியை துடைத்துக்கொண்டு, மலையிலிருந்து கீழே இறங்கிச் சென்றேன். அப்பொழுது ஏதோ ஒன்று, "இந்த வனாந்தரத்தில் என்னுடன் கூட நீ ஏன் நடக்கக்கூடாது?" என்று கேட்டது.




நான், “ஆம், ஆண்டவரே, என் மனப்பூர்வமாக அப்படிச் செய்வேன். உம்முடன் கூட நடப்பதென்பது இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் விட மிகவும் மகத்துவமானது” என்றேன். எனவே, என் துப்பாக்கியைத் தோளில் தொங்க வைத்துக் கொண்டு, காட்டின் வழியாக நடந்து சென்றேன் (அங்கிருந்த மரங்களின் மேல்

கோடாரி இது வரை பட்டதேயில்லை. அவை யாவும் புதிதாக வளர்ந்த மரங்கள்)

நான் அவ்விதம் நடந்து சென்று கொண்டிருந்த போது, "அந்த இடத்திற்கு சென்றால் என்ன? நேற்று எங்கள் விவாக நாள். என் மனைவி மேடாவைச் கௌரப்படுத்தும்விதமாக, அவளைச் சிந்தனையில் கொண்டு, சில நிமிடங்கள் அந்த இடத்தில் கழிக்கலாமே' என்னும் உணர்வு உண்டானது. "அந்த இடம் வரை நான் நடந்துசென்று, எங்கள் விவாக நாளை நினைவுகூர்ந்து அந்த கறுத்த மரங்களின் மற்ற பாகத்தில் நடந்து, 'கோரல் உச்சி' (Corral Peak)யில் நடந்து, மற்ற வழியாக சென்று, இவ்விதமாக நடந்து சென்று, குதூகலிப்பேன்" என்று எண்ணினேன்.

அப்பொழுது நான், "பிதாவே, நீர் என்னுடன் நடந்து வருகிறீர் என்று நானறிவேன். தேவனைக் காட்டிலும் நான் கூட நடந்து செல்லக்கூடிய மகத்தானவர் வேறெவருமில்லை" என்றேன். நான் மலைகளை விட்டு கீழே இறங்கி வந்த பிறகும் சூரியவெளிச்சம் உண்டாயிருந்தது.

பெட்ரோல் நிரப்பும் ஸ்தலங்களில் நான் காரை நிறுத்தினேன். நான்கு நாட்கள் கழித்தும், அந்த பாகத்தில் மழை பெய்யவேயில்லை. "எவ்வளவு அருமையான நாள்! என்று ஒவ்வொரு நாளும் எண்ணினேன். தினந்தோறும் சூரியன் பிரகாசித்தது. அது சரியா சகோதரர்களே? (சகோதரர்கள் ஆமென் என்கின்றனர் – பதிப்பாசிரியர்) பாருங்கள்? வானத்தில் சிறிதளவு மேகம்கூட இல்லை.

நான் பெட்ரோல் நிரப்பும் ஸ்தலத்தையடைந்து, அந்த ஆளிடம், "மிகவும் அருமையான நாள் அல்லவா?" என்றேன்.

"ஆம்" என்றார்.

"பயங்கர வெப்பமான நாளல்லவா?" என்றேன்.

அதற்கு அவர், "உங்களுக்குத் தெரியுமா? ஒரு வினோதமான காரியம் சம்பவித்தது. பயங்கரப் பனிப்புயல் வரப்போகின்றது என்று அவர்கள் முன்னறிவித்தனர். ஆனால் திடீரென்று அது நின்று விட்டது" என்றார்.

நான் நியூ மெக்சிகோவை அடைந்தேன். நானும் என் மகனும் ஒரு பொருளை வாங்க அங்கு ஒரு சிறிய கடைக்குச் சென்றோம். நான் அங்கிருந்தவரிடம், "அருமையான நாளல்லவா?" என்றேன்.

"ஆம்" என்றார் அவர்.

"மிகவும் உலர்ந்து காணப்படுகின்றது" என்றேன்.

"ஆம், சில நாட்களாகவே உலர்ந்துள்ளது" என்றார்.

"நீங்கள் இந்த இடத்தைச் சேர்ந்தவர்களா?" என்று கேட்டேன்.

அவர், "இல்லை! நான் விஸ்கான்சினை (Wisconsin) சேர்ந்தவன். ஆனால் இருபது ஆண்டுகாலமாக இங்கேயே வாழ்ந்து வருகிறேன். எனவே, இதையே என் சொந்த இடமாக பாவிக்கலாம்" என்றார்.

"அப்படியானால் இங்கு நீங்கள் குடி வந்திருக்கிறீர்கள். மிகவும் தூசி படிந்திருந்ததாகக் காணப்படுகின்றதே" என்றேன்.

அதற்கு அவர், “ஒரு விசித்திரமான சம்பவம் நடந்தது. பனிப்புயல் வருமென்றும், அதிக பனிப்பெய்யும் என்றும் வானிலை முன்னறிவிப்பு உண்டாயிருந்தது. உண்மையில் அந்தப் பனிப்புயல் தொடங்கியது. ஆனால் அது நின்றுவிட்டது” என்றார்.

“அப்படியா?” என்றேன்.

நான் வீட்டையடைந்தேன். பனிப்புயல் வரப்போவதாகவும் அந்த வழியே போகக்கூடாதென்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் சகோதரன் டாம் கூறினார். அவர் நாட்டைக் கடந்து வந்தார். ஆனால் ஒரு துளி மழையோ அல்லது வேறெதுவோ உண்டாயிருக்கவில்லை. அவர் எப்பொழுதும் போலவே இன்றும் தேவனாயிருக்கிறார். பாருங்கள்?

நான் மலையில் நடந்துசென்று கொண்டேயிருந்தேன்... ஒலி நாடாவின் இந்தப் பாகத்தை என் மனைவி கேட்க மாட்டாள் என்று நம்புகிறேன். பாருங்கள்? உங்களிடம் ஒன்றைக் கூறப்போகின்றேன். நான் உங்களிடம் உண்மையையே கூறுகின்றேன். அது தான்

சரியான முறையாகும். ஒவ்வொரு விவாக நாளன்றும் நான் இத்தகைய வேட்டைப் பயணம் செல்வதைக் குறித்து என் மனைவி ஏன் முறுமுறுப்பதில்லையென்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. நான் என்ன நினைத்தேன் தெரியுமா? விவாக நாளன்று அநேகர் வீட்டிற்கு வருவார்கள். நான் பயந்த சுபாவமுடையவன் (nervous) என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? எப்பொழுதும் நான் தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்துமே பேச விரும்புகிறேன். எனவே, சில நாட்கள் நான் வேட்டைக்குச் சென்றால் அவளுக்குத் தொல்லை சற்று நீங்கியிருக்கும் என்று நினைக்கிறாளோ என்னமோ! என்று எண்ணினேன்.

அதற்காக அவளிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன். இத்தகைய சிந்தை என்னில் எழுந்ததற்காக நான் தேவனிடம் மன்னிப்பு கோருகிறேன். ஏனெனில் இந்த எண்ணம் என் மனதில் எழுந்த வண்ணமாக இருந்தது. அவள் வீட்டுவேலை அதிகம் செய்பவள். சமையலறையிலோ அல்லது வேறெங்காவது

அவள் சதா வேலை செய்து கொண்டேயிருப்பாள்.

அவளை அறிந்துள்ள உங்களுக்கு துணி சலவை செய்யும் இயந்திரத்தை அவள் எப்பொழுதும் இயக்கிக் கொண்டேயிருப்பாள் என்பது தெரியும். அவள் வேலை செய்துகொண்டிருக்கும்போது நான் அவளிடம், "துணி சலவை செய்வதை நிறுத்தி விட்டு வந்து என்னுடன் பேசிக்கொண்டிரு. நான் உன்னை நேசிக்கிறேன். நீயும் என்னை நேசிக்கிறாய் என்று நீ கூற விரும்புகிறேன்" என்பேன்.

"உங்களை நான் நேசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்" என்று அவள் கூறிவிட்டு, மறுபடியும் துணி சலவை செய்யும்பணியில் மும்முரமாக ஈடுபடுவாள்.

"அதை நிறுத்திவிட்டு, என்னுடன் உட்கார்ந்து பேசு" என்பேன்.

"ஓ, பில் (Bill), எனக்கு எத்தனையோ வேலையிருக்கிறது" என்பாள்.

"நான் வேட்டைக்குச் சென்றால் வேலை செய்வதற்கு அவளுக்கு அதிக நேரம்

கிடைக்குமென்று எண்ணுகிறாள் போலும்'' என்று நினைத்துக் கொண்டேன். வேதாகமம் எனக்கு முன்னால் இருக்கிறது. நான் தேவனுடைய வார்த்தைக்கு முன்னால் உள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். நான் மலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஏதோ ஒன்று என்னில் சம்பவித்தது.

அப்பொழுது தேன் நிலவுக்கு என் மனைவியை அங்கு அழைத்து சென்ற சம்பவம் எனக்கு ஞாபகம் வந்தது. அவள் கறுப்பு மயிர் கொண்டவளாய், பழுப்பு நிறக் கண்கள் உடையவளாய் அப்பொழுது மிகவும் அழகாக இருந்தாள். அந்த மரங்களைக் கடந்து செல்வதற்காக சில நேரங்களில் அவளைத் தூக்கிவிட்டு, இப்படியாக கரடிவேட்டையாடும் இடத்தையடைய அவளுக்கு உதவி செய்தேன். நான் கரடியை வேட்டையாடிக் கொல்வதை அவளுக்குக் காண்பிக்க விரும்பினேன். அவள் அப்பொழுது என் 'மாட்டுக்காரப் பையனின் காலணியை' (Cow boy boots) போட்டுக் கொண்டிருந்தாள். (அது இருபத்திரண்டு அல்லது இருபத்தொன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த

சம்பவம். எங்களுக்கு 1941ல் விவாகம் நடந்தது) மரங்களைக் கடப்பதற்கென, அவளைத் தூக்கிச் சென்றேன்.

“இப்பொழுது பாவம்! அவள் என் தொல்லைகளைப் பொறுத்துக் கொள்கிறாள். அவளுடைய தலைமயிர் நரைத்துவிட்டது என்றெல்லாம் எண்ணியவாறே நடந்து சென்று கொண்டிருந்தேன். (சகோதரன் பிரான்ஹாம் கனைக்கிறார் – ஆசி). சில நாட்களாக நான் சவரம் செய்யவீல்லை. எனக்கும் நரைத்துவிட்டதென்று அப்பொழுது நான் உணர்ந்தேன். ஏனெனில் நரைத்த தாடி வளர்ந்திருந்தது. அப்பொழுது நான், “கிழவனே, உன் காலமும் முடிவடையப் போகின்றது. நீ ஏதாவது செய்ய நினைத்திருந்தால், அதை துரிதமாகச் செய். உனக்கும் வயதாகிக் கொண்டே போகின்றது” என்று உள்ளத்தில் எண்ணினேன்.

அவ்விதம் நான் நடந்து சென்று கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று சம்பவித்தது. திடீரென்று (என் நடத்தையிலும் என் கொள்கையிலும்) நான் ஒரு வாலிபனைப்போல் மாறினேன். என்னை ஒரு வாலிபனாக பாவித்துக்

கொண்டேன். நான் தலைகுனிந்த வண்ணம் இருந்தேன். நிமிர்ந்து பார்த்தபோது, என் மனைவி கரங்களை விரித்தபடி எனக்கு முன்பாக நின்று கொண்டிருந்தாள். என் முகத்தை தடவிக் கொண்டே, “மேடா, நீயா அது, அன்பே?” என்று கேட்டேன்.

நான் இங்குமங்கும் பார்த்தேன். “என்ன நேர்ந்தது?” என்று நினைத்துக் கொண்டேன். அப்பொழுது தான் நான் அவருடன் கூட நடந்து கொண்டிருக்கிறேன் என்னும் உணர்வு வந்தது. அதன் பின்பு என் உருவம் மாறினது. நான் மறுபடியும் கிழவனானேன். எனக்கு நேர்ந்த தரிசனம் என்னை விட்டகன்றது.

நான் நின்று, என் தொப்பியைக் கழற்றி என் இருதயத்தின் மேல் வைத்துக்கொண்டு, “இயேசுவே, என் இருதயம் எத்தனையோ ஆண்டு காலமாக பாரமாயிருந்து வருகிறது. அவ்விதம் பாராமாயுள்ளது என்று நான் உமக்குச் சொல்லத் தேவையில்லை. நான் மனஸ்தாபப்பட்டேன், எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் நான் செய்து கொண்டு வருகிறேன். இருப்பினும் ஏன் இந்தப் பாரம்

என்னை விட்டு அகலவில்லை?" என்று கேட்டேன்.

நான் இவ்விதம் நடந்து சென்று, எனக்கு முன்னால் முப்பது அல்லது நாற்பது கெஜம் தூரமுள்ள குன்றையடைந்து அதன் மேலேறிச் சென்றேன். நான் மிகவும் பலவீனமாயிருப்பது போன்ற ஒரு உணர்ச்சி எனக்குண்டானது. நான் குன்றின் உச்சியையடைந்த போது, மிகவும் பலவீனமடைந்து, தள்ளாட ஆரம்பித்தேன். நான் தொப்பியைப் போட்டுக் கொண்டு என் தலையை அங்கிருந்த புன்னை மரம் ஒன்றின்மேல் சாய்த்தேன். அவ்விதம் நான் நின்று கொண்டிருந்த போது, சூரிய வெப்பம் என் முதுகின்மேல் விழுந்தது. "அந்த மழையையும் காற்றையும் போக்கின தேவன்" என்று எண்ணிக் கொண்டேயிருந்தேன்.

அப்பொழுது 'பட், பட்' என்று ஏதோ ஒரு சப்தம் கேட்டது.

"அது என்னவாயிருக்கும்? தண்ணீரெல்லாம் உலர்ந்து விட்டதே!" என்று எண்ணிக் கொண்டே கீழே நோக்கினபோது, என் கண்ணீர் என் நரைத்த தாடி வழியாய் வழிந்தோடி, தேவன்

உலர வைத்திருந்த அந்த உலர்ந்த இலைகளின் மீது விழுவதைக் கண்டேன். நான் மரத்தின் மேல் தலை சாய்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தேன். என் கரங்கள் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. என் ஒரு கை துப்பாக்கி கட்டியிருக்கும் கயிற்றுக்குள் (Sling) இவ்விதம் போடப்பட்டிருந்தது. நான் அங்கு நின்று கொண்டே அழுதேன்.

நான், "ஆண்டவரே, உமது ஊழியக்காரனாயிருக்க நான் பாத்திரவானல்ல. நான் அநேக தவறுகள் இழைத்திருக்கிறேன். வேண்டுமென்று நான் தவறுகள் செய்யவில்லை. ஆண்டவரே, நீர் எனக்கு நல்லவராகவே, இருந்து வந்திருக்கிறீர்" என்றேன்.

என் கண்கள் அப்பொழுது மூடப்பட்டிருந்தன. அப்பொழுது ஏதோ அசைவது போன்ற சத்தத்தைக் கேட்டேன்.

கண்களைத் திறந்து பார்த்தபோது, எனக்கு முன்னால் மூன்று மான்கள் நின்று கொண்டிருந்தன, நான் "சகோதரன் ஈவான்ஸுக்கு ஒன்றும், சகோதரன் உட்டுக்கு ஒன்றும்... அதோ மூன்று மான்கள். இதற்காகவே நான் காத்துக்

கொண்டிருந்து, காடுகளில் நடந்து சென்றேன்'' என்று எண்ணியவாறே துப்பாக்கியைக் கையிலெடுத்தேன். ‘‘இதை என்னால் செய்யமுடியாது, அப்படிச் செய்யமாட்டேன் என்று நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்'' என்று கூறி என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.

அப்பொழுது ஏதோ ஒன்று, ‘‘ஆனால் அவை உன் முன்னால் நிற்கின்றனவே!'' என்றது.

நான், ‘‘அப்படித்தான் ஒரு மனிதன் ஒரு முறை தாவீதிடம், கர்த்தர் அவரை (சவுலை) உன் கையில் ஒப்புக் கொடுத்தார் என்றான்'' என்று நினைத்துக் கொண்டேன். உங்களுக்கு சவுல் ராஜாவைப் பற்றி தெரியும்.

யோவாப் தாவீதிடம், ‘‘அதோ அவர் அங்கு படுத்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கொன்றுபோடும்'' என்றான்.

‘‘கர்த்தர் அபிஷேகம் பண்ணினவரைக் கொல்லாதபடி, கர்த்தர் என்னைக் காப்பாராக'' என்றான் தாவீது.

அந்த மான்கள் அங்கு நின்று கொண்டு என்னையே நோக்கிக் கொண்டிருந்தன. நான் “அவை தப்பிப் போகமுடியாது. தப்ப அவைகளுக்கு வழியேயில்லை. அவை முப்பது கெஜ தூரம்கூட இல்லை. என்னிடம் துப்பாக்கியும் இருக்கிறது” என்று எண்ணினேன். அதே சமயத்தில், “அதை என்னால் செய்ய முடியாது. என்னால் முடியவே முடியாது” என்றேன். அது ஒரு பெண் மானும், இரண்டு குட்டிகளுமாயிருந்தன. என்னால் துப்பாக்கியை எடுக்கவே முடியவில்லை. நான் அசையாமல் அப்படியே நின்று கொண்டிருந்தேன். நான், “அவ்விதம் செய்யமாட்டேனென்று தேவனிடம் வாக்கு கொடுத்திருக்கிறேன். அந்த சகோதரருக்கு இந்த மான்கள் தேவையில்லை. என்னால் முடியாது என்னால் முடியவே முடியாது” என்று எண்ணினேன்.

அப்பொழுது அந்தப் பெண் மான் நடந்து அருகில் வந்தது. கவனியுங்கள். நாலைந்து நாட்களாக நூறு பேர்கள் மான்களைச் சுட்ட வண்ணம் இருந்தனர். அதனால் மான்கள் பயம் கொண்டிருக்க வேண்டும். சிகப்பு வண்ணத்தைக் கண்ட மாத்திரத்தில் அவை ஓடி மறைந்துவிடும்

(நான் சிகப்பு சட்டையும் சிகப்பு தொப்பியும் அணிந்திருந்தேன்). ஆனால் இந்த மூன்று மான்களும் அங்கேயே நின்று கொண்டு என்னையே உற்று நோக்கிக் கொண்டிருந்தன.

நான் பெண் மானிடம், "தாயே, உன் குட்டிகளை அழைத்துக்கொண்டு காட்டுக்குச் சென்றுவிடு. நீ இப்பொழுது என் கைக்குள் இருக்கிறாய். உன் உயிரும் என் கைக்குள் இருக்கிறது. ஆனால் நான் உன்னைத் துன்புறுத்தப் போவதில்லை. அவ்விதம் நான் ஆண்டவருக்கு வாக்கு கொடுத்திருக்கிறேன்" என்றேன். ஆனால் அந்தப் பெண்மானோ என்னருகில் வந்து என்னை உற்றுப் பார்த்தது. அந்த குட்டிகளும்கூட அருகாமையில் வந்தன. (சகோ. பிரான்ஹாம் பீடத்தை இருமுறை தட்டுகிறார் - ஆசி). என் கையிலிருந்து புல்லைத் தின்னும் தூரமளவுக்கு அவை அருகாமையில் வந்தன. காற்று அவைகள் மேல் வீசினது. எனவே பெண் மான் திரும்பி சற்று தூரம் நடந்தது. குட்டிகளும் அதைப் பின் தொடர்ந்தன.

பின்பு அவை மறுபடியும் என் பக்கம் திரும்பி, என்னருகில் நடந்து வந்தன. நான்

அசையாமல் அங்கேயே நின்றேன். நான், “நீங்கள் காட்டுக்குள் சென்று விடுங்கள். எனக்கும் காடு என்றால் அதிகப் பிரியம். நீங்கள் உயிர் வாழுங்கள். உங்கள் உயிர் என் கரங்களில் இருக்கிறது. ஆனால் நான் உங்களை சும்மா விட்டு விடுகிறேன். உங்களால் தப்பிச் செல்லவே முடியாது என்று உங்களுக்குத் தெரியும்” என்றேன். மூன்றே வினாடிகளில் அவை மூன்றயும் என்னால் கொன்றுவிட முடியும். என்னால் எவ்வளவு வேகமாக சுட முடியுமோ, அவ்வளவு வேகமாக அவை என்னருகில் இருப்பதால் தப்பி ஓடிவிட முடியாது. எனவே “உங்களை விட்டு விடுகிறேன். நீங்கள் சென்று உயிர் வாழுங்கள்” என்றேன். நான் அங்கு நின்று கொண்டிருந்தேன். அவை நடந்து காட்டிற்குள் சென்று விட்டன.

என் முகத்தை நான் இப்படி துடைத்துக் கொண்டேன். அப்பொழுது ஒரு சம்பவம் நடந்தது. அந்தத் தெளிவான வானத்திலிருந்து – மேகத்திலிருந்து அல்ல – ஒரு சத்தம் என்னுடன் பேசினது. இது சிறிது நேரத்திற்குள் நடந்தது. அந்த சத்தம் என்னிடம், “உன் வாக்கை நீ நினைவு கூர்ந்தாய் அல்லவா?” என்றது.

நான், "ஆம், ஆண்டவரே" என்றேன்.

அவர், "நானும் என் வாக்கை நினைவு கூருவேன். நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்றார். உடனே என் இருதயத்திலிருந்த பாரம் அகன்றது. அதன் பின்பு அது வரவேயில்லை. இனிமேல் அது வாராமலேயே இருக்கட்டும்.

★★★★★

# இயற்கைக்கு மேம்பட்டவைகள் 3

# மரித்துப்போன ஒரு சகோதரன் உயிரோடு எழுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: **விளங்காத சத்தம்,** டிசம்பர் 18, 1960, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

43. அன்று காலை எலைஜ் பெர்ரி உயிரோடெழுப்பப்பட்டது எத்தனை பேருக்கு நினைவிருக்கிறது? உங்களில் சிலர் அங்கிருந் தீர்கள் அல்லவா? அநேக முறை அதை செய்தித்தாளில் பார்த்திருக்கிறீர்கள். சகோதரி வில்ஸனும் மற்றவர்களும் கைகளை உயர்த்தி னதைக் கண்டேன். அவர் மரித்தபோது நான் அங்கிருந்தேன். அவர் இங்குதான் வசிக்கிறார். எப்பொழுதாவது ஒருமுறை சபைக்கு வந்து அதைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்.

44. அவர் மரித்து பல மணி நேரமாகி விட்டது. அவர் நுரையீரலில் உள்ள இரத்த குழாய்கள் வெடித்ததால் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு இறந்து போனார். அவர் உடலெல் லாம் இரத்தமயமாக இருந்தது. நான் அங்கி

ருந்து நடந்து சென்று விட்டேன். அந்நாட்களில் நான் ஒரு வாலிப பிரசங்கி. சகோதரி ஜாக்சன் அப்பொழுது சபையின் அங்கத்தினராக இருந்தார்கள். மற்றும் ஒரு மெதோடிஸ்டு பிரசங்கியின் மனைவி, அவருடைய பெயர் இப்பொழுது எனக்கு மறந்து விட்டது. ஷாஃபினர், சகோதரன், சகோதரி ஷஃபினர். அவர்கள் வைஸ்ஹார்ட் குடும்பத்தினருக்கு ஏதோ ஒரு விதத்தில் உறவினர். அவர்கள்... சகோதரி ஷாஃபினர். அவர்கள் வைஸ் ஹார்ட் குடும்பத்தினருக்கு ஏதோ ஒரு விதத்தில் உறவினர். அவர்கள்.... சகோதரி ஷாஃபினர் படுக்கையினருகில் நின்று கொண்டிருந்தார்கள். நான் அங்கிருந்து நடந்து செல்லத் தொடங்கினேன். அவர் மரித்த இடத்தில் இரத்தமயமாக இருந்தது. அவருடைய கண்கள் பின்னால் சொருகியிருந்தன, அவருடைய தொண்டை வீங்கியிருந்தது. அவர்கள் போர்வையினால் தலையை மூடியிருந்தனர். அவருடைய மனைவி அங்கிருந்தாள். அவர்கள் அழுது கொண்டிருந்தனர், தங்கள் அன்பார்ந்த

வர்களுக்கு அறிவிக்க முகவரிகளைத் தேடிக் கொண்டிருந்தனர்.

45. நான் படுக்கையை விட்டு நடந்து செல்லத் தொடங்கினேன். அப்பொழுது ஒருவர் தம் கரத்தை என் மேல் போடுவதை உணர்ந் தேன். அது சகோதரி ஷாஃபினர் என்று நினைத்தேன். நான் திரும்பிப் பார்த்தபோது அங்கு யாருமில்லை. அதன் பிறகு நான் புறப்பட்டேன்..... நான் திரும்பிப் பார்த்த போது, அது என்னை விட்டுச் சென்றது.

46. அங்கு சகோ. எலைஜ் மரித்துக் கிடந்திருந்தார். நாங்கள் நெருங்கிய நண்பர் கள். நாங்கள் ஒன்றாக ஆற்றில் மீன்பிடிப்பது வழக்கம். நாங்கள் எப்படி ஒன்றாக இதைச் செய்தோமென்று உங்களுக்குத் தெரியும். அவர் ரயில் பாதையில் வண்டி ஓட்டிக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளாகி, அது அவருடைய நுரையீரலை சிதைத்து விட்டது. இரத்தம் பெருக்கெடுத்து ஓடினது. அவர் காசநோய் கண்டு மரித்துப் போனார்.

47. நான் இந்தப் பக்கம் போகத் தொடங்கினபோது, அந்த கரத்தை மறுபடியும் என்மேல் உணர்ந்தேன். நான் திரும்பிப் பார்த்த போது, அது என்னை விட்டு நீங்கினது.

48. நான் என்ன செய்து கொண்டிருக் கிறேன் என்று அறிவதற்கு முன்பே, நான் அவர் மேல் கிடந்து, என் உதடுகளை அவர் உதடுகளின் மேல் வைத்தேன். அவர் மேல் படுத்துக் கொண்டதனால் என் மேலும் இரத்தம் ஓட்டிக்கொண்டது. நான் தேவனிடத்தில் முறை யிட்டேன். அப்பொழுது ஏதோ ஒன்று என் காதின் பக்கமாக வருவதை உணர்ந்தேன். அது அவருடைய கரம்.

49. அவர் இங்கு நின்று கொண்டு அதைக்குறித்து சாட்சி கொடுப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், பாருங்கள். எப்படி அவர்.... அவர் உயிர் திரும்ப வந்தது. அது இருபத் தைந்து அல்லது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. அவர் இன்றும் உயிரோ டிருக்கிறார். அவர் அந்த வளைவு பாகத்தில்

வசிக்கிறார். அண்மையில் அவர் இங்கு வந்து, சபையில் அதைக் குறித்து சாட்சி கொடுத்தார்.

★★★★★

# நான் அங்கே நின்று சவரம் செய்து கொண்டிருந்த போது, கர்த்தருடைய தூதனானவர், “மிக வேகமாக உன்னுடைய குழந்தையிடம் போ” என்று கூறுவதைக் கேட்டேன்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

## செய்தி: **தேவனை விசுவாசித்தல்**, *பிப்ரவரி 24, 1952, பத்தி எண் 31-35*

*31. எனக்கு ஒரு சிறு மகள் இருக்கிறாள், அவளுக்கு எட்டு, பத்து-பத்து மாதங்களே வயதாகிறது, அவள் தான் சிறிய சாரா, அவள் ஒரு இனிமையான சிறிய செல்லமான அன்புக்குரியவள். நான் அவளோடு மிக அதிகமாக இருந்திருக்கவில்லை. நான் அவளுக்கு அளவுக்கு மீறி செல்லம் கொடுத்து விட்டேன், நான் அதை ஒப்புக்கொள்வேன். அவளை எல்லா நேரமும் அப்படியே என்னுடைய கரங்களிலே வைத்திருந்தேன். நீங்களும் கூட அவ்வாறு செய்திருப்பீர்கள், நான் அவளை எதற்காக காண வருகிறேனோ அதைக் காட்டிலும் இனிமேல் அந்தச்சிறிய*

கள்ளங்கபடற்ற அன்பை நீங்கள் பார்க்க வராமல் இருந்தால், உங்களுக்கு தெரியும், அப்படியே எப்போதாவது, நான் வீட்டில் இருக்கும் போது. எனவே நான்-நான் அவளுக்கு முழுவதுமாக செல்லம் கொடுத்து கெடுத்து விட்டேன் என்று நினைக்கிறேன்.

32. அவள் சில பற்களை உடைத்து விட்டிருக்கிறாள் (cutting) மேலும் அவள் மிகவும் வியாதிப்பட்டிருந்தாள். அவளுக்கு வயிற்றுப்போக்கும் கூட இருந்திருக்க வேண்டும். நான் சுற்றிலும் போய்க்கொண்டிருந்தேன்; உங்களுடைய சில குடும்பங்கள் கூட அதைக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்: மிகவும் வியாதிப்பட்டு, வாந்தியும்

வயிற்றுப்போக்கும். இப்படியாக அவள் அழுது கொண்டிருந்தாள். அவளுடைய தாய் மிகவும் களைப்போடு இருந்தாள், அவள் தூக்கத்தை விட்டு விழிக்கக்கூட இல்லை; அல்லது நானும் ஒருபோதும் அவ்வாறு செய்யவில்லை. பிறகு நான் தூக்கத்தை விட்டு விழித்தெழும்பி விட்டேன், நான் அவர்களிலிருந்து பின்னால் இரண்டாவது அறையில் உறங்கிக் கொண்டிருந்தேன்; அவளுடைய தாயும் அவளும் அங்கே உள்ளே இருந்தார்கள், சிறிய மகளும் நானும் வேறொரு அறையில் உறங்கிக் கொண்டிருந்தோம், அவள் தான் சிறிய ரெபெக்கா. இந்நிலையில் பில்லி பாலோ அந்த இரவில் தன்னுடைய பாட்டியோடு தங்கியிருந்தான். எனவே நான்-நான் தூக்கத்தை விட்டு எழும்பினேன்; அப்போது நான்

கேட்டேன்... நான், “இவ்விதமாக என்னைத் தூக்கத்தை விட்டு எழும்பச் செய்தது எது?“என்றேன்.

*33.* அவருடைய சத்தம், “உன்னுடைய குழந்தையிடம் போய் அவளுக்கு குடிக்க தண்ணீர் கொடு“ என்று கூறுவதைக் கேட்டேன்.

*34.* நான் அந்த அறைக்குள் சென்றேன், அவள் அழுது கொண்டிருந்தாள். அவள் நீண்ட நேரமாகவே அழுது கொண்டிருந்தாள். பக்கங்களில் தடுப்பு அமைக்கப்பட்ட குழந்தைகளுக்கான அவளுடைய சிறு படுக்கையில் இருந்தபடி, அவளுடைய தாயை எழுப்ப நிச்சயமாகவே அவளால் (முடியவில்லை). நான் சென்றேன், நான் உள்ளே போகையில் ஒரு குவளை தண்ணீரை வைத்திருந்தேன். அந்தச் சிறு குழந்தை

சற்றேறக்குறைய அந்தக் குவளை தண்ணீர் முழுவதையுமே குடித்து விட்டாள், அப்போது அவள் அங்கே அந்நிலையில், அவளுக்கிருந்த வயிற்றுப்போக்கோடும் இருந்தாள். அப்போது நான், "அது அருமையாக இல்லையா, அதைச் செய்வதற்கு அவர் எவ்வளவு இனிமையானவராயிருக்கிறார்!" என்று நினைத்தேன். அது இரண்டாவது, அல்லது மூன்றாவது தடவை நடந்த காரியமாகும்.

*35.* நான் ஒருசமயம் சியஸ் பால்ஸில் (Sioux Falls)-ல் இருந்தேன், அவளுக்கு மூன்று மாதங்கள் மட்டுமே வயதாகியிருந்தது. அவள் ஒரு படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய தாய் வெளியே நடந்து சென்று, சில

ஜனங்களிடம் பேசிக் கொண்டிருந்தாள். நானோ அவ்விதமாக சவரம் செய்து, கூட்டத்திற்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். நான் அங்கே நின்று சவரம் செய்து கொண்டிருந்த போது, கர்த்தருடைய தூதனானவர், “மிக வேகமாக உன்னுடைய குழந்தையிடம் போ” என்று கூறுவதைக் கேட்டேன். நான் என்னுடைய சவரக்கத்தியை கீழே வைத்து விட்டு, சுற்றி ஓடினேன். வெறும் ஒன்றரை நிமிட நேரத்தில், அவள் போய் விட்டிருந்தாள். அவள் ஏறக்குறைய இவ்விதமான உயரமுள்ள படுக்கையின் மேல் இருந்தாள். அவள் இரண்டு கைகளையும்... அவள் அப்படியே உருண்டு வந்து கொண்டிருந்தாள், அவள் தன்னுடைய தலையை உருட்டி, சிறிய தலையானது கீழே தொங்கிக் கொண்டிருந்தது, அவளுடைய கையானது அப்படியே

வெளியே நழுவிக் கொண்டிருந்தது. அவள் அதைவிட்டு வெளியே (விழப்) போகையில் நான் அவளைப் பிடிப்பதற்காக மிக வேகமாக ஓட வேண்டியிருந்தது. அவர் அருமையும் இனிமையுமானவராக இருக்கிறார்.

# மரண நிழல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?, டிசம்பர் 30, 1962

முதலில் ஜனங்கள் அதைப் புரிந்து கொள்ள இயலாமல், அது தவறென்றும், நான் வெறுமனே கூறுகிறேன் என்றும் எண்ணினர். ஆனால் அது உண்மையென்பதை நிரூபிக்க, பரிசுத்த ஆவியானவர் விஞ்ஞான கருவிகளின் மூலம் அநேக முறை அதைப் புகைப்படம் எடுக்கச் செய்தார்.

நான், “ஒரு ஸ்திரீ மரண நிழலினால் மூடப்பட்டிருக்கிறாள்”

என்று உரைத்தேன். அவள் புகைப்படத்தை எடுத்த போது, ஒரு கறுத்த நிழல் அவளை மூடியிருந்தது. சில வாரங்களுக்கு முன்பு ஒரு பட்டணத்தில் நான் பிரசங்கம் செய்து கொண்டிருந்தேன். பிரசங்கம் நடந்து கொண்டிருக்கும்போது, நாங்கள் பிரசங்கிக்கையில், நீங்கள்—நீங்கள் புகைப்படம் எடுக்கக்கூடாது என்பது உங்களுக்குத் தெரியும், பிரசங்கம் செய்கையில் இந்த புகைப்படம் எடுத்த போதும், அதே நியதி கடைபிடிக்கப்பட்டு வந்தது. ஆனால் யாரோ ஒருவர் ஒரு புகைப்படக்

கருவியை, காமிராவை வைத்திருந்தார்.

ஆகவே நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த, அந்நியராகிய ஸ்திரீயை நோக்கி கூறினேன்... நான்—நான் சதர்ன் பைன்ஸில் இருந்தபோது, நான், செல்வி இன்னார்—இன்னார் அவர்கள் மீது ஒரு நிழல் காணப்படுகின்றது" என்றேன். என் வாழ்க்கையில் நான் முன்பு கண்டிராத ஒரு ஸ்திரீ. "நீங்கள் இப்பொழுது தான் வைத்தியரைக் கண்டு வந்திருக்கிறீர்கள். உங்கள் இரு மார்பகங்களிலும் புற்று நோய் பரவியுள்ளது. நீங்கள் வைத்தியரால்

கைவிடப்பட்டீர்கள்.
மரணத்திற்கேதுவான ஒரு கறுத்த முகமூடி உங்களை நிழலிட்டிருக்கிறது" என்றேன்.

அப்பொழுது காமிராவை வைத்துக் கொண்டிருந்த சகோதரியிடம், "அந்த ஸ்திரீயை புகைப்படம் எடு" என்று ஏதோ ஒன்று கூறினது. புகைப்படம் எடுக்க அந்த சகோதரிக்கு விருப்பமில்லை. ஆனால் மேலும் மேலும் "புகைப்படம் எடு" என்னும் கட்டளை தொனித்துக்கொண்டேயிருந்ததால், திடீரென்று காமிராவை எடுத்து புகைப்படத்தை... புகைப்படத்தை

எடுத்தார்கள். விஞ்ஞானப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டது, அதோ அங்கே இருக்கின்றது. கறுத்த நிழல்; அங்கே அறிக்கைப் பலகையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது.

"சுகமடைவேன்" என்னும் விசுவாசம் அந்த ஸ்திரீக்கு தோன்றினபோது, அவர்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. "அந்த நிழல் மறைந்துவிட்டது" என்று நான் கூறின மாத்திரத்தில், மற்றொரு புகைப்படம் எடுக்கப்பட்டது. பாருங்கள்? அதில் கறுத்த மூடி மறைந்துபோய், புகைப்படம் தெளிவாகக் காணப்பட்டது. தேவனுடைய

கிருபையால் அந்த ஸ்திரீ உயிரோடிருக்கிறார்கள்.

★★★★★

# குருடான ஜான் ரையான் பார்வையடைதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 2

*செய்தி:* **விசுவாசமானது ஆறாவது புலனாகும்**, *ஜுன் 11, 1960*

37. இங்கே போர்ட் வேய்னில் (Fort Wayne) வயதான ஜான் ரையானை (John Ryan) நீங்கள் நினைவில் கொண்டுள்ளீரா? தாடி வைத்திருக்கும் மனிதன் அல்ல, வேறொரு குருடரான ஜான் ரையான். அங்கே பெரிய கூடாரத்திலே ஒரு கூட்டத்தை நான் நடத்திக் கொண்டிருந்தேன். நான் முடித்த பிறகு வியாதியஸ்தருக்காக ஜெபிக்க சென்று கொண்டிருந்தேன். இந்த மனிதன் மேலே மாடியின் முன் பாகத்தில் அமர்ந்திருந்தார். அவர் ஒரு கத்தோலிக்கராய் இருந்தார். அவர் வைத்திருந்த அட்டையின் மூலம் அவரை மேடையின் மேல் இருந்த பீடத்தின் அருகே கொண்டு வந்தனர்.

நான் இருந்த இடத்திற்கு அவர் வந்தபோது, "உம்முடைய பெயர் ஜான் ரையான்" என்று கூறினேன்.

"அது சரி"

"நீர் விசுவாசத்தில் ஒரு கத்தோலிக்கன்."

அவர், "அது சரி" என்றார்.

“நீர் சர்க்கஸில் வாகனம் ஓட்டுவது வழக்கமல்லவா?”

“அது சரி” என்று கூறினார்.

“பிறகு நீங்கள் இருபது வருடங்கள் அல்லது அதற்கு மேலாக குருடராய் இருக்கிறீர்கள்”.

அவர், “அது சரி” என்று கூறினார். லியுகேமியா அல்லது வேறெதோ ஒரு வியாதி அவருடைய கண்ணிற்குள் சென்று அவரை குருடாக்கியது. நான் கூறினேன், “நீர் ஒரு பிச்சைக்காரர்”

“முற்றிலுமாக ஒரு பிச்சைக்காரன் அல்ல, நான் தெருக்களில் உட்கார்ந்து கொண்டிருப்பேன்” என்று அவர் கூறினார்.

நான் கூறினேன், “நல்லது, அது சரி, இயேசு கிறிஸ்து உங்களை சுகப்படுத்துவார் என்று நீர் விசுவாசிக்கிறீரா?”

“நான் விசுவாசிக்கிறேன்” என்று கூறினார்.

“கர்த்தராகிய இயேசுவே, நான் இந்த குருட்டுத்தனத்தை இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே இப்பொழுது நான் கடிந்து கொள்கிறேன். அது இவரை விட்டு நீங்கட்டும்” என்று அவருக்காக ஜெபித்து கரங்களை அவர்

மீது வைத்தேன். நான் திரும்பி பார்த்தபோது தன் பார்வையை பெற்றவராய் நடந்து செல்வதை நான் கண்டேன். நான் "**கர்த்தர் உரைக்கிறதாவது**" (நீங்கள் அதை கவனியுங்கள்) - **கர்த்தர் உரைக்கிறதாவது**, நீங்கள் உங்கள் பார்வையை பெற்றுக் கொண்டீர்" என்று கூறினேன்.

நல்லது, "அவர் என்னால் பார்க்க முடியவில்லை" என்று கூறினார்.

நான், "அதனுடன் செய்வதற்கு ஒன்றுமில்லை. துதித்துக் கொண்டு உங்கள் வழியில் செல்லுங்கள்" என்று கூறினேன். ஆகையால் அவர் சென்றுவிட்டார்.

38 அங்கே இருந்த ஒரு ஸ்திரீக்கு ஒரு பெரிய களகண்ட மாலை கட்டி (goiter) கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. நாங்கள் அவளுக்காக ஜெபித்தவுடன் சில நிமிடங்களில் அது மறைந்து போனது. அங்கே எல்லா உதவியாளர்களையும் தள்ளிக்கொண்டு ஜான் ரையான் மறுபடியுமாக வந்தார். ஜெப வரிசையில் எனக்கு உதவி செய்து கொண்டிருந்த மனிதன் அவரை மேடையிலிருந்து கீழே இறக்க ஆரம்பித்தார். "நான் அந்த பிரசங்கியை பார்க்கவேண்டும்" என்று அவர் கூறினார். ஆகையால் அவரை மறுபடியுமாக

மேலே கொண்டு வந்தனர். அவர் என்னிடம், "நான் சுகமடைந்துவிட்டேன் என்று நீர் என்னிடம் கூறினீர் அல்லவா?" என்று கூறினார்.

"நீங்கள் சுகமடைந்தீர்கள்" என்று கூறினேன்.

அவர், "நல்லது, நான் சுகமடைந்திருந்தால் என்னால் பார்க்கக் கூடுமே" என்று கூறினார்.

நான் கூறினேன், "ஓ, அதனுடன் செய்தற்கு எதுவுமில்லை. நீர் என்னிடம் கூறினீர்..."

அவர், "நல்லது நான் சுகமடைந்தேன் என்று நீங்கள் கூறினீரே" என்றார்.

நான் கூறினேன், "நீர் என்னை விசுவாசிப்பதாகக் கூறினீரல்லவா?"

அவர், "நான் உம்மை விசுவாசிக்கிறேன்" என்றார்.

நான் கூறினேன், "அப்படியென்றால் எதைக் குறித்து நீர் சந்தேகிக்கின்றீர்?"

அவர், "நல்லது நான் சுகமடைந்திருந்தால், என்னால் பார்க்கக் கூடும் அல்லவா?" என்றார்.

நான், "நீர் பார்வை அடைவீர், நீர் பார்வையை உடையவராக இருப்பதை தேவன் எனக்கு தரிசனத்தில் காண்பித்திருக்கின்றார்

என்றால் அது நடந்தாக வேண்டும்" என்றேன். அவர் ஒரு கத்தோலிக்கராயிருந்ததால் இதைப் போன்ற ஒன்றைக் குறித்து அவருக்கு போதிக்கப்படவில்லை.

அவர், "அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் என்ன செய்ய வேண்டும்" என்றார்.

நான் கூறினேன், "நல்லது, நீர் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால் தேவன் உமக்கு பார்வையை அளித்தார் என்று உங்கள் பாதையில் அவரைத் துதித்துக் கொண்டே செல்லுங்கள்".

அவர் தள்ளிக் கொண்டே முன் வந்து, "நீங்கள் எங்கிருக்கிறீர்கள்? ஒரு நிமிடம் பொறுங்கள். உங்கள் பெயர் என்ன?" என்றார்.

"பிரான்ஹாம்" என்று நான் கூறினேன்.

"உம்மை நான் தொட்டுப் பார்க்கவேண்டும்" என்று கூறினார். அவர் தனது கைகளால் என்னைத் தொட நான் விட்டேன். அவர் திரு. பிரான்ஹாம் அவர்களே, நான் ஒரு கத்தோலிக்கனானதால் என்னுடைய பாதிரியாரை விசுவாசிக்க மாத்திரம் கற்பிக்கப்பட்டுள்ளேன். நான் உம்மிடம் உதவிக்கு வந்துள்ளேன். நான் யாரென்றும், என்னுடைய

நிலைமைகள் என்னவென்றும் நீர் என்னிடம் கூறினீர். யாரும் அறியாததை தேவன் அறிவார். அது உண்மை என்று நான் விசுவாசிக்கிறேன். ஆதலால் "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று நான் கூறிக் கொண்டே இருப்பேன் என்று கூறினார். மேடையிலிருந்து அவர் இறங்கிச் சென்றார்.

39 அடுத்த இரண்டு இரவுகள் என்னால் பிரசங்கிக்கக் கூட முடியவில்லை. நான் இருந்த இடத்தில் அவர் எழுந்து "என்னை சுகப்படுத்தினதற்காக, கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்பார். நான் பிரசங்கிக்க ஆரம்பிக்கும்போது "என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சத்தமிடுவார்.

செய்தித்தாள்களை விற்கும் பணியை அவருக்கு அளித்திருந்தார்கள். ஏறக்குறைய ஒரு மாதம் சென்றுவிட்டிருந்தது. அவர் "என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். அவர் அங்கே, "கர்த்தர் என்னை சுகப்படுத்தினதற்காக கூடுதலான ஸ்தோத்திரம்" என்று சத்தமிட்டார். அவரைப் பார்த்து சிரித்து அவரை கேலி செய்தனர். சிறிய செய்தித்தாள் விற்கும் பையன்கள் அவரைப் பார்த்து "உஸ்" என்று சத்தமிட்டு பரியாசம் செய்தனர்.

தெருக்களில் உள்ள மக்கள், “அந்த வயதான மனிதனுக்கு மூளை குழம்பிவிட்டது” என்றனர்.

அவர் “என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு கூடுதலான, கூடுதலான ஸ்தோத்திரம், இதைப் படியுங்கள்: என்னை சுகப்படுத்தினதற்காக “கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என இன்னுமாக அவர் கூறிக் கொண்டிருந்தார்.

40 அவரைக் கொண்டு சென்றனர் (அவரை மனநோய் காப்பகத்திற்கு அனுப்ப வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தனர்) அங்கே அவரை கேள்விகள் கேட்டனர். அதற்கு அவர், “நான் எப்போதும் இருப்பதைப் போன்றே என் மனநிலையும் சரியாக இருக்கின்றது. ஆனால் நான் தேவனை விசுவாசிக்கிறேன். என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறிக் கொண்டிருந்தார். அதுஎன்ன? அவர் அந்த ஆறாவது புலனைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவருக்குள் இருந்த ஏதோ ஒன்று அதைப் பிடித்துக் கொண்டிருந்தது. அவரால் காண முடிகின்றதோ, இல்லையோ, அவர் எந்த கவனத்தையும் செலுத்தவில்லை, அந்த பார்வைக்குரிய காரியம் அதனுடன் (ஆறாவது புலனுடன் - தமிழாக்கியோன்) செய்வதற்கு ஒன்றும் இல்லை. அவர் வேறொரு பார்வையை

உடையவராய் இருந்து அதன் மூலமாக அவர் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தேவனைப் பார்த்துக் கொண்டிருந்தார். நாம் பார்க்கக் கூடாதவைகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். எல்லாக் கிறிஸ்தவ போர்க் கவசமும் விசுவாசத்தினால் ஆனது. தேவனிடத்தில் வருகின்ற ஒருவன் அவர் தேவன்தான் என்பதை விசுவாசிக்க வேண்டும். ஆவியின் கனிகள் ஒவ்வொன்றும், மற்ற எல்லாக் காரியங்களும், காணப்பட முடியாத விசுவாசமே ஆகும். காணக்கூடாததை, விசுவாசத்தின் மூலம் நாம் காண்கிறோம். அல்லேலூயா!

41 அவர் சவரம் (ஷேவ்) செய்து கொள்ளதக்கதாக ஒரு சிறு பையன் அவரை அந்த தெருவிற்கு அப்பால் இருந்த முடித்திருத்தக் கடைக்கு கூட்டிச் சென்றான். அங்கே இருந்த முடி திருத்துபவன் ஒருவன் அவரை கிண்டல் செய்ய எண்ணினான். ஆகவே அவருடைய முகம் முழுவதும் சோப்பை தடவினான். மற்ற முடி திருத்துபவர்கள் அவனைப் பார்த்து அதைப் போன்று கண் அடித்தனர். அவன் கூறினான். அவருக்கு ஒரு பக்கத்தில் சவரம் செய்து முடித்தான்; டவலை முகம் துடைக்கும் துணியை

அங்கு வைத்தான். அவன் கூறினான்: “பெரியவர் ரையான் அவர்களே”,

அவர், “ஆம் மகனே” என்றார்.

“அங்கே மேலே அந்த பரிசுத்த உருளையன் வந்த போது அவனை காண நீங்கள் சென்றீர்கள் என்று கேள்விப்பட்டேன்” என்றான்.

“ஆம், நான் சென்றேன்”, என்றார்.

“நீங்கள் சுகமானதாக நான் கேள்விப்பட்டேன்” என்று கூறினான்.

அதற்கு அவர், “ஆம் நான் சுகமானேன். என்னை சுகப்படுத்தினதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்று கூறினார். **அவ்வாறு அவர் கூறின மாத்திரத்தில் அந்த முடிதிருத்தக் கடையின் நாற்காலியிலேயே அவர் கண்கள் திறக்கப்பட்டது.** தன் கழுத்தைச் சுற்றி டவல் சுற்றப்பட்ட நிலையில் அவர் நாற்காலியை விட்டு குதித்தெழுந்து ஓட ஆரம்பித்தார். சவரம் செய்பவன் தன் கையில் உள்ள கத்தியுடனே பின்னாலே கதவிற்கு நேராக ஓடினான். இந்த வயதான மனிதனாகிய ரையான் தன்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு சத்தமாக “கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர்

என்னை சுகப்படுத்திவிட்டார்” என்று கூச்சலிட்டுக் கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் தெருவில் ஓடினார்.

42 அது என்ன? அந்த ஆறாவது புலனை பற்றிக் கொண்டிருத்தல். ஏதோ ஒன்று அதை உண்மையாக்கிவிடுகின்றது. ஆம் ஐயா. இந்த ஆறாவது புலனின் மூலம் இராஜ்ஜியங்கள் ஜெயிக்கப்பட்டன. ஆமென். ஆறாவது புலன் இராஜ்ஜியங்களை ஜெயம் கொள்ளச் செய்தது. இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆமென். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? ஆறாவது புலனின் மூலமாகத்தான் எரிகோவின் மதில்கள் தரையில் விழுந்தன.

இந்த ஆறாவது புலனின் மூலமாகத்தான் பவுலை கடல் விழுங்கக் கூடாதபடிக்கு ஆனது. எல்லா நம்பிக்கையும் அற்றுப் போன நிலையில் அவன் அங்கே இருந்தபோது கர்த்தருடைய தூதனை அவன் தரிசனத்தில் கண்டான். அவன் திரும்பி வந்து “தைரியமாயிருங்கள்” என்று கூறினான். காரணம் என்ன? இரவும் பகலுமாக பதினான்கு நாட்கள் சந்திரனோ, நட்சத்திரங்களோ, எதுவுமே இல்லாமல் மிகவுமாக இருண்டு போயிருந்தது. எப்பொழுதும் இல்லாத அளவிற்கு

புயல் பயங்கரமாக இருந்தது. ஆனால் அவன் கர்த்தருடைய தூதனை அவன் கண்டபொழுது அந்த ஆறாவது புலன் கிரியை செய்ய ஆரம்பித்தது. அல்லேலூயா.

அந்த ஆறாவது புலனால் பேதுருவை சிறைச் சாலையில் வைக்க இயலவில்லை. இல்லை ஐயா. தேவனுடைய வல்லமையானது ஒரு தூதனை அங்கே அனுப்பி அவனை விடுவித்தது.

அந்த ஆறாவது புலனால் பவுலையும் சீலாவையும் தொழு மரத்தில் வைக்க இயலவில்லை. தேவன் பூமி அதிர்ச்சியை அனுப்பி எல்லாவற்றையும் முழுமையாக அசைத்துப் போட்டார்.

அந்த ஆறாவது புலன் சில நேரத்திற்கு உங்களுக்காக கிரியை செய்ய விடுங்கள். ஏனென்றால் அந்த ஆறாவது புலனின் காரணத்தால் தானியேலை சிங்கங்களாலும் கூட விழுங்க முடியவில்லை. அந்த ஆறாவது புலனிற்கெதிராக அவைகளால் ஒன்றுமே செய்ய இயலவில்லை. இல்லை ஐயா.

அந்த ஆறாவது புலனின் காரணத்தால் நெருப்பு எபிரேயப் பிள்ளைகளை பட்சிக்கக் கூடாமல், எரிக்கக் கூடாமல் இருந்தது.

மார்த்தாளுக்குள் கிரியை செய்து கொண்டிருந்த அதே ஆறாவது புலனின் மூலமாகத்தான் மரித்து நான்கு நாட்களாய் கல்லறைக்குள் கிடந்த தன் சகோதரனை இயேசு உயிரோடு எழுப்புவதைக் காண (மார்த்தாள் - தமிழாக்கியோன்) வந்தாள்...

அதே ஆறாவது புலன் ஒரு குஷ்டரோகியை சுகமாக்கினது. அதே ஆறாவது புலன்தான் இயேசு கிறிஸ்துவை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினது. அதே ஆறாவது புலன்தான் என்றாவது ஒரு நாளிலே சபையை எடுத்துக்கொண்டு, மகிமைக்குள்ளே கொண்டு செல்லும்.

*(இந்த மேற்கோள் ஏற்கனவே தமிழில் வந்த செய்தியிலிருந்து எடுக்கப்பட்டது.)*

இந்தச் செய்தி முழுவதையும் வாசிக்க

DOWNLOAD

**Only believe,**
**Only believe**
**All things are possible,**
**Only believe.**



சகோ. பினேகாஸ்
போன்: 8838623242,
9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in